**தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின்**

**இணை செயல்முறைகள், சென்னை–6.**

**ந.க.எண். 019528/எம்/இ1/2022, நாள். 11.06.2022.**

பொருள்: பள்ளிக்கல்வி – கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் – 2022–2023ஆம் கல்வியாண்டில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் – முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: 1.அரசாணை (நிலை) எண். 163/பள்ளிக் கல்வி (ERT)த் துறை, நாள்.10.07.2017

2. 2022–2023 ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கை அன்று மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சரின் அறிவிப்புகள்.

3.பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண். 056611/எம்/இ1/2021, நாள். 06.12.2021.

******

அரசுப் பள்ளிகளின் வளர்ச்சிக்கென கற்றல் கற்பித்தல் முறைகளில் நாட்டிற்கே முன்னோடியாக எண்ணும் எழுத்தும், இல்லம் தேடிக் கல்வி, மாதிரிப் பள்ளிகள் என பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு உருவாக்கி சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, கல்வி இணைச் செயல்பாடுகள் (Co–Curricular) மற்றும் கல்விசாரா செயல்பாடுகளை (Extra–Curricular) சிறப்பாகச் செயல்படுத்த தமிழ்நாடு சட்டப் பேரவையில் 2022–2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பின்வரும் அறிவிப்புகளை வெளியிட்டார்:

1. **<u>அறிவிப்பு எண் 12:</u>** பள்ளி அளவில் கல்வி மற்றும் இணைச் செயல்பாடுகளான மன்றச் செயல்பாடுகள், நூல் வாசிப்பு, நுண்கலைகள், விளையாட்டு மற்றும் அறிவியல் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் மாணவர்கள் உலக அளவிலும், தேசிய / மாநில அளவிலும் புகழ்பெற்ற இடங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர்.
2. **<u>அறிவிப்பு எண் 15:</u>** பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே கல்வி இணைச் செயல்பாடுகளை ஊக்குவிக்க வெவ்வேறு காலகட்டங்களில் இலக்கியம்,

கவின்கலை, சூழலியல் உள்ளிட்ட மாணவர் மன்றங்கள் தொடங்கப்பட்டு நடைமுறையில் இருந்தன. கொரோனா பெருந்தொற்றால் கடந்த சில ஆண்டுகளாக இம்மன்றங்கள் செயல்படாத நிலையில் அவற்றைப் புதுப்பித்து சிறப்பாகச் செயல்பட வழிவகை செய்யப்படும்.

3. **<u>அறிவிப்பு எண் 17:</u>** மாறி வரும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப அரசுப்பள்ளி மாணவர்களுக்குத் தொழில் நுட்ப அறிவு மற்றும் கணிணி மொழி மீதான ஆர்வத்தை ஏற்படுத்த கணினி நிரல் மன்றங்கள் மற்றும் எதிர்காலத் தொழில் நுட்பமான எந்திரனியலைக் கற்றுக்கொள்ள எந்திரனியல் மன்றங்கள் பள்ளிகளில் ஏற்படுத்தப்படும். மேலும், இணைய பாதுகாப்பு மற்றும் Ethical Hacking தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டு ஆண்டு தோறும் மாநில அளவிலான ஹேக்கத்தான் போட்டிகள் நடத்தப்படும்.
4. **<u>அறிவிப்பு எண் 20:</u>** அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு செயல்வழிக் கற்றலை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் காய்கறித் தோட்டம் மாணவர்களால் ஏற்படுத்தப்படும். அவற்றில் விளையும் காய்கறிகள், பழங்கள், கீரைகள் அப்பள்ளிகளின் சத்துணவில் பயன்படுத்தப்படும்.
5. **<u>அறிவிப்பு எண் 25:</u>** அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களை ஒவ்வொருமாதமும் பள்ளிக்கு அழைத்து மாணவர்களின்உடல்நலம், கற்றல் அடைவு, இணைச் செயல்பாடுகளான விளையாட்டு, வாசிப்புத்திறன், மன்றச் செயல்பாடுகளில் பங்கேற்பு உள்ளிட்டபள்ளியின் அனைத்து நிகழ்வுகள் குறித்தும் எடுத்துக் கூறப்படும். இதன்வாயிலாக அரசுமற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் அவர்தம்பெற்றோரும் பயன்பெறுவர்.

பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் கல்விசாரா செயல்பாடுகளை ஊக்குவிக்க அனைத்து அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் 2022–23–ஆம் கல்வி ஆண்டில் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களும் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்ற நோக்கத்தில் கீழ்க்காணும் மன்றங்கள் / சங்கங்கள் / கலைச் செயல்பாடுகள் போன்றவற்றை புதுப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது:

**இலக்கிய மன்றம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), சுற்றுச்சூழல் மன்றம், வினாடி வினா மன்றம், தொன்மைப் பாதுகாப்பு மன்றம், நுகர்வோர் மன்றம், தகவல் தொழில்நுட்ப மன்றம், பேரிடர் மேலாண்மை மன்றம், வாக்காளர் விழிப்புணர்வு மன்றம், குழந்தை உரிமைகள் பாதுகாப்பு மன்றம், நுண்கலை மன்றம், திரைப்பட மன்றம், சாரண சாரணியர் இயக்கம், தேசிய மாணவர் படை, நாட்டுநலப் பணித்திட்டம், இளம் செஞ்சிலுவைச் சங்கம், செஞ்சுருள் சங்கம்.** இவை தவிர பல்வேறு பள்ளிகள் பல்வேறு மன்றங்களை நடத்தி வருகின்றன. அவற்றையும் மன்றச் செயல்பாடுகளுக்கென எடுத்துக்கொள்ளலாம்.

ஒவ்வொரு வாரமும் கலைச் செயல்பாடுகளுக்கென (Art and Culture) இரு பாடவேளைகளும், மன்றச் செயல்பாடுகளுக்கென (Club Activities) இரு பாடவேளைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. இச்செயல்பாடுகள் பள்ளி வேலை நேரத்தில் அவற்றிற்கென ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளில் அனைத்து மாணவர்களுக்கும் கொண்டு சேர்க்க கீழ்க்காணும் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படுகின்றன:

**<u>கல்வி இணைச் செயல்பாடுகள் (Co-curricular activities)</u>**

i. மன்ற செயல்பாடுகளை பள்ளிகளில் 6 முதல் 10ஆம் வகுப்பு வரை சிறப்பாகச் செயல்படுத்த ஏதுவாக மாதிரிக் கால அட்டவணை உருவாக்கப்பட்டுள்ளது (இணைப்பு 4). பள்ளிகள் தங்கள் தேவை மற்றும் சூழ்நிலைக்கேற்ப வாரத்தின் ஏதாவது ஒரு நாளில் கடைசி இரு பாடவேளைகளில் இச்செயல்பாடுகளைத் திட்டமிடலாம்.

ii. இச்செயல்பாடுகள் அனைத்தும் அவற்றிற்கென ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளில் அனைத்து மாணவர்களுக்கும் நடத்தப்படுதல் வேண்டும். ஒவ்வொரு மாணவரும் அவர்தம் விருப்பத்திற்கேற்ப அனைத்துச் செயல்பாடுகளிலும் பங்கேற்க ஊக்கப்படுத்த வேண்டும்.

iii. அனைத்து ஆசிரியர்களையும் மன்றச் செயல்பாடுகளில் சுழற்சி முறையில் ஈடுபடுத்துதல் வேண்டும். தேவைப்படின், ஒரே மன்றத்திற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களையும், ஒரே ஆசிரியரை ஒன்றுக்கு மேற்பட்ட மன்றங்களுக்கும் பொறுப்பாசிரியராக்கலாம்.

iv. இலக்கிய மன்றத்திற்கு தமிழ் மற்றும் ஆங்கில ஆசிரியர்களையும், வினாடி வினா மன்றத்திற்கு கணித மற்றும் அறிவியல் ஆசிரியர்களையும், சுற்றுச்சூழல் மன்றத்திற்கு சமூக அறிவியல் ஆசிரியரையும் வகுப்பு வாரியாக

பொறுப்பாசிரியாராக நியமிக்கலாம். எனினும், ஆசிரியர்களைத் தெரிவு செய்யும்போது அவர்தம் ஆர்வம் மற்றும் விருப்பத்திற்கேற்ப முன்னுரிமை அளித்து நியமிக்கலாம்.

v. மன்றச் செயல்பாடுகள் மற்றும் நூலக செயல்பாடுகளுக்கென ஆசிரியர்கள் செலவிடும் பாடவேளையையும் அவர்தம் பணி நேரமாகக்கொண்டு ஆசிரியர்களுக்கான பணிப்பகிர்வு காலஅட்டவணையை உருவாக்க வேண்டும்.

vi. மன்ற செயல்பாடுகளைப் பொறுத்தவரையில், மாதத்தின் முதல் வாரத்தில் இலக்கிய மன்றமும் இரண்டாவது வாரத்தில் வினாடிவினா மன்றமும் மூன்றாவது வாரத்தில் சுற்றுச்சூழல் மன்ற செயல்பாடுகளுக்கென எடுத்துக்கொண்டு மீதமுள்ள ஒரு / இரு வாரத்திற்கு பள்ளியின் விருப்பத்திற்கேற்ப ஒவ்வொரு முறையும் பக்கம் 3இல் கொடுக்கப்பட்டுள்ள பிற மன்றங்களில் ஏதேனும் ஒரு மன்ற செயல்பாட்டினை தெரிவு செய்து நடத்திக் கொள்ளலாம்.

vii. இலக்கிய மன்றத்தின் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) வாயிலாக மாணவர்களை கதை, கட்டுரை, கவிதை மற்றும் பட்டிமன்றம் என பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடச் செய்யலாம். பள்ளி அளவில் ஒவ்வொரு மாதமும் சிறந்து விளங்கும் மாணவர்களை ஒன்றிய அளவிலும், ஒன்றிய (Block) அளவில் வெற்றி பெற்ற மாணவர்களை மாவட்ட அளவிலும் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கச் செய்யவேண்டும். ஒவ்வொரு மாதமும் மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் ஆண்டுக்கொருமுறை மாநில அளவில் நடைபெறும் இலக்கிய முகாம் மற்றும் போட்டிகளில் பங்கேற்பர். இம்முகாமில் தமிழ்நாட்டிலுள்ள தலைசிறந்த எழுத்தாளர்கள் மாணவர்களைச் சந்தித்து உரையாடுவர். **இலக்கிய மன்ற செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் சுமார் 15 மாணவர்கள் வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர். மாநில அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் "கவிமணி விருது" வழங்கப்படும்.**

viii. ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வாரம் நடைபெறும் வினாடி வினா மன்றத்திற்கு இரண்டு பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. தேவையான பொது அறிவுப் புதிர்களை மாணவர்களே தயாரித்து வர உற்சாகப்படுத்தலாம். மாண்புமிகு அமைச்சரால் அறிவிக்கப்பட்டு விரைவில் வெளிவர இருக்கும் ஊஞ்சல் மற்றும் தேன்சிட்டு போன்ற சிறார் இதழ்களிலிருந்தும் நூலகப்

பாடவேளைகளில் மாணவர் வீட்டிற்கு எடுத்துச்சென்று படிக்கும் நூல்களிலிருந்தும் பொது அறிவு சார்ந்த வினாக்களைக் கேட்க மாணவர்களை ஊக்கப்படுத்தலாம். பள்ளி அளவில் நடத்தப்படும் வினாடி வினா போட்டிகளில் ஒவ்வொரு மாதமும் சிறந்து விளங்கும் மாணவர்களை ஒன்றிய அளவிலும், ஒன்றிய அளவில் வெற்றி பெற்ற மாணவர்களை மாவட்ட அளவிலும் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கச் செய்யவேண்டும். ஒவ்வொரு மாதமும் மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் ஆண்டுக்கொருமுறை மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பர். **மாநில அளவில் இவ்வாறு வெற்றி பெறும் சுமார் 20 மாணவர்கள் வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர்.**

**ix.** ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வாரத்தில் சுற்றுச்சூழல் மன்றம் / தேசிய பசுமைப்படைச் செயல்பாடுகளை இணைத்துத் திட்டமிடலாம். உலக உயிரின நிதியம் (World Wildlife Fund) மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்துடன் (Tamil Nadu Pollution Control Board) இணைந்து பசுமைப் பள்ளித் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் குறித்து விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் தனியே அனுப்பிவைக்கப்படும். **இத்திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தும் பள்ளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பசுமை முதன்மையாளர் விருது (Green Champions Award) வழங்கப்படும்.**

மேலும், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் சட்டப் பேரவையில் அறிவித்துள்ள காய்கறித் தோட்டத் (Kitchen Garden) திட்டமும் சுற்றுசூழல் மன்றத்தின் வாயிலாகச் செயல்படுத்தப்படும். இது குறித்த அரசாணையும் வழிகாட்டி நெறிமுறைகளும் தனியே வழங்கப்படும்.

x. ஒவ்வொரு மாதமும் நான்காவது / ஐந்தாவது வாரத்தில் பள்ளியின் விருப்பத்திற்கேற்ப பக்கம்– 3இல் கொடுக்கப்பட்டுள்ள மன்றங்களுள் ஏதேனும் ஒரு மன்ற செயல்பாட்டினை தெரிவு செய்து நடத்திக் கொள்ளலாம்.

இணையப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இணையவழிக் குற்றங்களிலிருந்து மாணவர்களைத் தற்காத்துக் கொள்ளவும், பாதுகாப்பற்ற இணையதளங்களை அடையாளங்கண்டு அவற்றிலிருந்து விலகியிருக்கவும் தேவையான பயிற்சிகளை அளிக்க கணினி நிரல் மன்றங்களையும் மாணவர்களின் படைப்பாற்றலை வெளிக்கொணர எதிர்கால

தொழில்நுட்பங்களுள் ஒன்றான எந்திரனியல் (Robotics) மன்றங்களையும் கணினி அறிவியல் ஆசிரியர் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் துவங்கலாம்.

கணினி நிரல் மன்றங்கள் மற்றும் எந்திரனியல் மன்றங்களின் பொறுப்பாசிரியர்களுக்கு மாவட்ட அளவில் உரிய பயிற்சிகள் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு அளிக்கப்படும். பள்ளி அளவில் ஒவ்வொரு மாதமும் கணினி நிரல் / எந்திரனியல் மன்றச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் மாணவர்கள் ஒன்றிய அளவிலும், ஒன்றிய அளவில் வெற்றி பெற்ற மாணவர்களை மாவட்ட அளவிலும் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கச் செய்யவேண்டும். ஒவ்வொரு மாதமும் மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் ஆண்டுக்கொருமுறை மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பர். **மாநில அளவில் நடைபெறும் பள்ளி புத்தாக்கத் திட்டப் போட்டிகளில் (School Innovation Development Project) வெற்றி பெறும் மாணவர்களுக்கு "இளம் கண்டுபிடிப்பாளர் (Young Innovator)" விருது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும். இம்மன்றச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் மாணவர்களில் சுமார் 10 பேர் வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர்.**

**<u>கல்விசாரா செயல்பாடுகள் (Extra-curricular activities)</u>**

i. கலைச் செயல்பாடுகளை பள்ளிகளில் சிறப்பாகச் செயல்படுத்த ஏதுவாக மாதிரிக் கால அட்டவணை உருவாக்கப்பட்டுள்ளது (இணைப்பு-4). பள்ளிகள் தங்கள் தேவை மற்றும் சூழ்நிலைக்கேற்ப வாரத்தில் ஏதாவது ஒரு நாளில் கடைசி இரு பாடவேளைகளில் இச்செயல்பாடுகளைத் திட்டமிடலாம்.

ii. இச்செயல்பாடுகள் அனைத்தும் அவற்றிற்கென ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளில் அனைத்து மாணவர்களுக்கும் நடத்தப்படுதல் வேண்டும். ஒவ்வொரு மாணவரும் அவர்தம் விருப்பத்திற்கேற்ப அனைத்துச் செயல்பாடுகளிலும் பங்கேற்க ஊக்கப்படுத்த வேண்டும்.

iii. அனைத்து ஆசிரியர்களையும் ஒவ்வொரு கலைச் செயல்பாட்டிற்கும் சுழற்சி முறையில் ஈடுபடுத்துதல் வேண்டும். தேவைப்படின், ஒரே செயல்பாட்டிற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களையும், ஒரே ஆசிரியரை ஒன்றுக்கு மேற்பட்ட செயல்பாடுகளுக்கும் பொறுப்பாசிரியராக்கலாம். எனினும், ஆசிரியர்களைத் தெரிவு செய்யும்போது அவர்தம் ஆர்வம் மற்றும் விருப்பத்திற்கு

முன்னுரிமை அளித்து நியமிக்கலாம். இச்செயல்பாடுகளுக்கென ஆசிரியர்கள் செலவிடும் பாடவேளையும் அவர்தம் பணி நேரமாகக்கொண்டு ஆசிரியர்களுக்கான பணிப்பகிர்வுக் காலஅட்டவணையை உருவாக்க வேண்டும்.

iv. கலைச் செயல்பாடுகளைப் பொறுத்தவரையில், மாதத்தின் முதல் வாரத்தில் ஓவியம் / ஓரிகாமி / கைவினைச் செயல்பாடுகளும், இரண்டாவது வாரத்தில் சிறார் திரைப்படமும், மூன்றாவது வாரத்தில் நாடகம் / கூத்துக் கலை சார்ந்த செயல்பாடுகளும், நான்காவது வாரத்தில் இசை / வாய்ப்பாட்டு / நடனம் / பாரம்பரியக் கலை சார்ந்த செயல்பாடுகளும் பள்ளியின் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து நடத்திக்கொள்ளலாம். ஐந்தாவது வாரம் செயல்பாடுகள் வரும் நிலை ஏற்படின் பள்ளிகள் தங்கள் விருப்பத்திற்கேற்ப மேற்கூறிய செயல்பாடுகளில் ஏதேனும் ஒன்றை தங்கள் விருப்பதிற்கேற்ப தெரிவு செய்து நடத்திக் கொள்ளலாம்.

v. ஓவிய / கைவினை ஆசிரியர்கள் உள்ள பள்ளிகளில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களும், இவ்வாசிரியர்கள் இல்லாத பள்ளிகளில் சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியரும் ஓவியம், ஓரிகாமி மற்றும் கைவினைக் கலைகள் தொடர்பான பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கவேண்டும். ஆசிரியர்கள் இப்பொருள் குறித்த நுணுக்கங்களை You Tube போன்ற தளத்திலோ, கல்வித் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளின் வாயிலாகவோ பெற்று மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். அனைத்து மாணவர்களின் படைப்புகளையும் கம்பிப் பந்தல் வாயிலாகவோ, வேறு முறைகளிலோ ஆவணப்படுத்த வேண்டும். **சிறந்த படைப்புகளைத் துறையால் வெளியிடப்படும் சிறார் இதழில் இடம்பெறச் செய்ய, "ஆசிரியர், தேன்சிட்டு, 8வது தளம், ஈ.வெ.கி.சம்பத் மாளிகை, பள்ளிக் கல்வி அலுவலக வளாகம், நுங்கம்பாக்கம் சென்னை–6" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் தேன்சிட்டு இதழில் வெளிவரும்.**

vi. மாதத்தின் ஒவ்வொரு இரண்டாவது வாரமும் ஒவ்வொரு பள்ளியிலும் சிறார் திரைப்படங்கள் திரையிடப்படும். திரைப்படங்கள் மாணவருடைய சிந்தனை மற்றும் செயல்பாடுகளில் ஏற்படுத்தும் தாக்கம் அளப்பறியது. இக்காட்சி ஊடகத்தை மாணவர்களுடைய முன்னேற்றத்திற்காக பயன்படுத்துவது இம்முயற்சியின் நோக்கமாகும். திரையிடப்படவேண்டிய படங்கள் அடங்கிய

குறுந்தகடுகள் ஒவ்வொரு பருவத்தின் தொடக்கத்திலும் பள்ளிகளுக்கு வழங்கப்படும். திரைப்படக் காட்டி (Projector) இல்லாத பள்ளிகள் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் வாயிலாக வாடகைக்குப் பெற்று திரையிடவேண்டும்.

படம் திரையிடப்படுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட ஆசிரியர் மாணவர்களிடம் திரைப்படம் குறித்து சிறு உரையாற்ற வேண்டும். திரைப்படம் முடிந்த பிறகு ஏதேனும் 5 மாணவர்களை ஆசிரியர் கண்டறிந்து அனைத்து மாணவர்கள் முன்னிலையிலும் 2–3 நிமிடங்கள் திரைப்படம் குறித்து பேசச்செய்ய வேண்டும். பின்னர், அனைத்து மாணவர்களையும் திரைப்படம் குறித்து இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் தம் சொந்த நடையில் எழுதித்தரச் சொல்லவேண்டும். இது, படம் குறித்த விமர்சனமாகவோ, பாத்திரம் குறித்த திறனாய்வாகவோ, படக்கதைச் சுருக்கமாகவோ, படத்தில் தான் உணர்ந்தவற்றை விவரிப்பதாகவோ இருக்கலாம். அனைத்து மாணவர்களின் படைப்புகளையும் கம்பிப் பந்தல் வாயிலாகவோ, வேறு முறைகளிலோ ஆவணப்படுத்த வேண்டும். சிறந்த படைப்புகளை துறையால் வெளியிடப்படும் சிறார் இதழில் இடம்பெறச் செய்ய அனுப்பி வைக்கவேண்டும்.

பள்ளி அளவில் ஒவ்வொரு மாதமும் சிறந்து விளங்கும் மாணவர்களை ஒன்றிய அளவிலும், ஒன்றிய அளவில் வெற்றி பெற்ற மாணவர்களை மாவட்ட அளவிலும் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கச் செய்யவேண்டும். ஒவ்வொரு மாதமும் மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் ஆண்டுக்கொருமுறை மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பர். **மாநில அளவில் இவ்வாறு வெற்றி பெறும் சுமார் 15 மாணவர்கள் வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர்.**

vii. மூன்றாவது வாரத்தில் நாடகம் / கூத்துக் கலை சார்ந்த செயல்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. 6 முதல் 10ஆம் வகுப்பு வரை பாடநூல்களில் இடம்பெற்றுள்ள நாடகத்தையோ, பள்ளி / பொது நூலகத்திலிருந்து நாடகம் தொடர்பான நூல்களிலிருந்தோ, தமிழ் பாடநூலிலுள்ள இலக்கியப் பகுதியைத் தேர்ந்தெடுத்தோ நாடகமாக உருவாக்கி மாணவர்களை நடிக்க ஊக்கப்படுத்தலாம். பள்ளிக்கு அருகாமையிலுள்ள நாடகக் கலைஞர்களைப் பள்ளிக்கு அழைத்து மாணவர்களுக்கு நாடகம் குறித்த நுணுக்கங்களை அறிமுகப்படுத்தலாம். திருவண்ணாமலை, வேலூர் போன்ற மாவட்டங்களில் கூத்துக்கலை கிராம அளவில் சிறப்பாக நிகழ்த்தப்பட்டு வருகிறது. அதுபோல,

பள்ளிக்கு அருகாமையில் நாடகம், கூத்து, தோல்பாவை போன்ற கலை வடிவங்களைப் பின்பற்றும் கலைஞர்கள் இருப்பின் அவர்களை இச்செயல்பாடுகள் குறித்து பள்ளி மேலாண்மைக் குழுக்கள் வாயிலாக பள்ளிக்கு அழைத்து மாணவர்களுக்கு பயிற்றுவிக்கலாம். இதுகுறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் தனியே வழங்கப்படும். இச்செயல்பாடுகளை மாத வாரியாக ஆவணப்படுத்துதல் அவசியமாகும்.

viii. நான்காவது வாரத்தில் இசை / வாய்ப்பாட்டு / நடனம் / பாரம்பரியக் கலை சார்ந்த செயல்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. மாணவர்களுடைய கலை ஆர்வத்தை ஊக்குவிப்பது, கற்பனைத் திறனை மேம்படுத்துவது, பாரம்பரியக் கலைகளை பள்ளியளவில் கொண்டு சேர்ப்பது ஆகியவை இச்செயல்பாடுகளின் நோக்கமாகும். பள்ளிகள் மாணவர்களின் விருப்பத்திற்கிணங்க இசை, வாய்ப்பாட்டு, நடனம், பாரம்பரிய கலைகளான கரகாட்டம், ஒயிலாட்டம், வில்லுப்பாட்டு, கும்மி, கோலாட்டம், பொம்மலாட்டம், கிராமியப் பாடல் போன்றவற்றில் (இவற்றில் கூறப்படாத, அந்தந்த பகுதிகளிலிருக்கும் கலைகளையும் சேர்த்து) பயிற்சி அளிக்கலாம்.

அரசு இசைப்பள்ளி கல்லூரி, ஜவஹர் சிறுவர் மன்றம் போன்ற அரசு அமைப்புகளிடமிருந்தும் தனியார் கலைக் கல்வி நிறுவனங்களிடமிருந்தும், கலைஞர்களை அழைத்து வெவ்வேறு கலை வடிவங்களை மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கலாம்.

அரசாணை 163, நாள்.10.07.2017இன் படி கலைத் திருவிழா நடத்துவது தொடர்பாக விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் அளிக்கப்பட்டுள்ளன. பள்ளி அளவில் ஒவ்வொரு மாதமும் சிறந்து விளங்கும் மாணவர்களை ஒன்றிய அளவிலும், ஒன்றிய அளவில் வெற்றி பெற்ற மாணவர்களை மாவட்ட அளவிலும் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கச் செய்யவேண்டும். ஒவ்வொரு மாதமும் மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் ஆண்டுக்கொருமுறை மாநில அளவில் நடைபெறும் கலைத் திருவிழாவில் பங்கேற்பர். **மாநில அளவில் இவ்வாறு வெற்றி பெறும் சுமார் 20 மாணவர்கள் வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர்.**

ix. மேற்கூறிய கல்விசாரா செயல்பாடுகள் தவிர செஞ்சிலுவைச் சங்கம், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித்திட்டம், சாரண சாரணியர் மற்றும் செஞ்சுருள் சங்கம் போன்றவற்றிற்கான செயல்பாடுகளை பள்ளி வேலை நாட்களில் காலை / மாலை நேரங்களில் விருப்பமுள்ள மாணவர்களைக் கொண்டு திட்டமிடலாம். இக்கல்வியாண்டில் இச்செயல்பாடுகளுக்கென தனித்தனியே வழிகாட்டு நெறிமுறைகள் பின்னர் வெளியிடப்படும்.

**மாதிரிப் பாடவேளை:**

அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கீழ்க்காணும் கால வேளைகள் அந்தந்தப் பள்ளிகள் தொடங்கும் நேரத்தை அடிப்படையாகக் கொண்டும் மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களால் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள 2022–2023ஆம் கல்வியாண்டு நாட்காட்டியில் உள்ளவாறும் பின்பற்றுதல் வேண்டும். (இக்காலவேளை 6 முதல் 12ஆம் வகுப்பு, நடுநிலைப் பள்ளியில் செயல்படும் 6 – 8 வகுப்புகளுக்கும் பொருந்தும். 1 முதல் 5ஆம் வகுப்புகளுக்கு இணைப்பு–2 & 3இல் குறிப்பிட்டுள்ளவாறு கால வேளையினைப் பின்பற்ற வேண்டும்).

| வ. எண் | காலம் | நிகழ்வுகள் | நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் (நிமிடம்) |
|---|---|---|---|
| 1 | காலை 9.10 மணி முதல் 9.30 மணி வரை | காலை வணக்கக் கூட்டம் | 20 நிமிடம் |
| 2 | 9.30 மணி முதல் 10.10 மணி வரை | முதல் பாடவேளை | 40 |
| 3 | 10.10 மணி முதல் 10.50 மணி வரை | இரண்டாம் பாடவேளை | 40 |
| 4 | 10.50 மணி முதல் 11.00 மணி வரை | இடைவேளை | 10 |
| 5 | 11.00 மணி முதல் 11.40 மணி வரை | மூன்றாம் பாடவேளை | 40 |

| | | | |
|---|---|---|---|
| 6 | 11.40 மணி முதல் 12.20 மணி வரை | நான்காம் பாடவேளை | 40 |
| 7 | 12.20 மணி முதல் 1.00 மணி வரை | மதிய உணவு இடைவேளை | 40 |
| 8 | 1.00 மணி முதல் 1.20 மணி வரை | சிறார் பருவ இதழ் / செய்தித்தாள் / நூல் வாசிப்பு போன்ற செயல்பாடுகள் | 20 |
| 9 | 1.20 மணி முதல் 2.00 மணி வரை | ஐந்தாம் பாடவேளை | 40 |
| 10 | 2.00 மணி முதல் 2.40 மணி வரை | ஆறாம் பாடவேளை | 40 |
| 11 | 2.40 மணி முதல் 2.50 மணி வரை | இடைவேளை | 10 |
| 12 | 2.50 மணி முதல் 3.30 மணி வரை | ஏழாம் பாடவேளை | 40 |
| 13 | 3.30 மணி முதல் 4.10 மணி வரை | எட்டாம் பாடவேளை | 40 |

***குறிப்பு:* பள்ளிகளின் அமைவிடம், போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு அந்தந்தப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழுக்களுடன் கலந்தாலோசித்து பள்ளி திறக்கும் / முடிக்கும் நேரத்தை முடிவு செய்து கொள்ளலாம்.**

கீழ்க்காணும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு தலைமையாசிரியர்கள் / அனைத்து வகை ஆசிரியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1. உடற்கல்வி ஆசிரியர்கள் பள்ளி வேலை நேரத்திற்கு 30 நிமிடத்திற்கு முன்பாகவே வருகை புரிதல் வேண்டும். உடற்கல்வி ஆசிரியர்கள் மாணவர்களின் வருகை, ஒழுக்கம், சீருடை ஆகியவற்றை நெறிப்படுத்திட வேண்டும். ஒவ்வொரு வகுப்பிற்கும் வாரத்திற்கு இரண்டு பாடவேளைகள்

உடற்கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. உடற்கல்வி ஆசிரியர்கள் குறிப்பிட்ட வகுப்பு மாணவர்கள் அனைவரையும் இப்பாடவேளைகளில் விளையாட வைக்கவேண்டும். வாரத்தில் ஒரு நாளில் பள்ளி நேரம் முடிந்தவுடன் அனைத்து மாணவர்களுக்கும் கூட்டு உடற்பயிற்சி ஏற்பாடு செய்யவேண்டும். மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ள பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை, 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தனித்தனியே கூட்டு உடற்பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும்.

2. தலைமையாசிரியர் / உதவி தலைமையாசிரியர் முன்னிலையில் காலை வணக்கக் கூட்டம் நடைபெறுதல் வேண்டும். காலை வணக்கக் கூட்டத்தில் மாணவர்களை தவறாமல் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும்.
3. மதிய உணவு இடைவேளை முடிந்த பின்பு 20 நிமிடம் ஐந்தாம் பாடவேளை ஆசிரியர்கள் வாயிலாக மாணவர்கள் சிறார் பருவ இதழ், செய்தித்தாள், பள்ளி நூலகத்திலுள்ள நூல்கள்போன்றவற்றை வாசிக்கச் செய்ய வேண்டும்.
4. வாரத்திற்கு ஒரு நாள் அனுபவப் பகிர்வு / நீதிபோதனை பாடவேளைக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பாடவேளைக்கு சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியர் பொறுபேற்று மாணவர்களின் மனநலன் சார்ந்து தகுந்த ஆலோசனை வழங்கவேண்டும்.
5. வாரத்திற்கு ஒரு நாள் நூலகச் செயல்பாடுகளுக்கென நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பார்வையில் கண்ட சுற்றறிக்கையில் விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை செவ்வனே பின்பற்ற வேண்டும்.
6. ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிக் கிழமை பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடத்த (பள்ளிகளுக்கு உகந்த வேறு தினம் இருப்பின் அந்த தினத்திலும் நடத்திக்கொள்ள) ஏற்கனவே அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. **அதே நாளில் பள்ளி மேலாண்மைக்குழு கூட்டத்திற்கு முன்பு அந்தந்த வகுப்புகளில் பெற்றோர் கூட்டம் நடத்தப்பெற வேண்டும். இக்கூட்டத்தில் ஆசிரியர், பெற்றோரிடம் அவர்தம் குழந்தைகளின் வருகை, கற்றல்நிலை, உடல் நலம், மன நலம், கல்வி இணைச் செயல்பாடுகள், கல்விசாரா செயல்பாடுகள் என பள்ளியின் அனைத்து நடவடிக்கைகளையும் விவாதிப்பதுடன், ஒவ்வொரு நாளும் வீட்டில்**

**மாணவரின் கற்றல் சார்ந்து பெற்றோர் செய்யவேண்டிய பணிகளையும் எடுத்துக்கூற வேண்டும்.** மேலும், பள்ளியின் கட்டமைப்பு வசதிகள் குறித்தும், அதனை மேம்படுத்த பள்ளி மேலாண்மைக்குழு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் தகவல் தெரிவிக்கவேண்டும்.

**இணைப்பு :**

1. 2022–2023 ஆம் கல்வியாண்டு நாட்காட்டி.
2. 1–3ஆம் வகுப்பு வரை மாதிரி கால அட்டவணை.
3. 4–5ஆம் வகுப்பு வரை மாதிரி கால அட்டவணை.
4. 6–10ஆம் வகுப்பு வரை மாதிரி கால அட்டவணை.
5. 11–12ஆம் வகுப்பு வரை மாதிரி கால அட்டவணை

ஒ.ப. [signature] 11.6.22

**தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும்**
**பள்ளிக்கல்வி ஆணையருக்காக**

11/06/22

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள். –(மின்னஞ்சல் வழியாக)

**நகல்**

1. அரசு முதன்மைச் செயலாளர்,
பள்ளிக்கல்வித்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை – 9.
2. மாநிலத் திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
சென்னை–6.
3. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை–6.
4. ஆணையர், ஆதிதிராவிடர் நல ஆணையரகம், சென்னை–5
5. இயக்குநர், பழங்குடியினர் நல இயக்குநரகம், சென்னை–5.
6. இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல இயக்குநரகம், சென்னை–5.
7. துணை ஆணையர் (கல்வி),
சென்னை மாநாகராட்சி அலுவலகம், சென்னை.

**ஜூன்- 2022**

| தேதி | கிழமை | விவரம் | நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 13 | திங்கள் | 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பள்ளிகள்திறப்பு | |
| 14 | செவ்வாய் | | |
| 15 | புதன் | உலக காற்று நாள் | |
| 16 | வியாழன் | | |
| 17 | வெள்ளி | | |
| 18 | சனி | CRC day | |
| 19 | ஞாயிறு | விடுமுறை | |
| 20 | திங்கள் | 12 ஆம் வகுப்பு - பள்ளிகள் திறப்பு | |
| 21 | செவ்வாய் | | |
| 22 | புதன் | | |
| 23 | வியாழன் | | |
| 24 | வெள்ளி | | |
| 25 | சனி | விடுமுறை | |
| 26 | ஞாயிறு | விடுமுறை | |
| 27 | திங்கள் | 11 ஆம் வகுப்பு - பள்ளிகள் திறப்பு | |
| 28 | செவ்வாய் | | |
| 29 | புதன் | | |
| 30 | வியாழன் | | |
| | | வேலை நாட்களின் எண்ணிக்கை | 14 |
| | | வேலை நாட்களின் மொத்தஎண்ணிக்கை | 14 |

ஜூலை -2022

| தேதி | கிழமை | விவரம் | நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வெள்ளி | | |
| 2 | சனி | விடுமுறை | |
| 3 | ஞாயிறு | விடுமுறை | |
| 4 | திங்கள் | | |
| 5 | செவ்வாய் | | |
| 6 | புதன் | | |
| 7 | வியாழன் | | |
| 8 | வெள்ளி | | |
| 9 | சனி | விடுமுறை | |
| 10 | ஞாயிறு | பக்ரீத் விடுமுறை | |
| 11 | திங்கள் | உலக மக்கள் தொகை நாள் | |
| 12 | செவ்வாய் | | |
| 13 | புதன் | | |
| 14 | வியாழன் | | |
| 15 | வெள்ளி | கல்வி வளர்ச்சி நாள் | |
| 16 | சனி | CRC day | |
| 17 | ஞாயிறு | விடுமுறை | |
| 18 | திங்கள் | | |
| 19 | செவ்வாய் | | |
| 20 | புதன் | | |
| 21 | வியாழன் | | |
| 22 | வெள்ளி | | |
| 23 | சனி | விடுமுறை | |
| 24 | ஞாயிறு | விடுமுறை | |
| 25 | திங்கள் | | |
| 26 | செவ்வாய் | | |
| 27 | புதன் | | |
| 28 | வியாழன் | | |
| 29 | வெள்ளி | | |
| 30 | சனி | விடுமுறை | |
| 31 | ஞாயிறு | விடுமுறை | |
| | | வேலை நாட்களின் எண்ணிக்கை | 21 |
| | | வேலை நாட்களின் மொத்த எண்ணிக்கை | 21+14=35 |

ஆகஸ்ட் – 2022

| தேதி | கிழமை | விவரம் | நாள்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | திங்கள் | | |
| 2 | செவ்வாய் | | |
| 3 | புதன் | | |
| 4 | வியாழன் | | |
| 5 | வெள்ளி | | |
| 6 | சனி | விடுமுறை | |
| 7 | ஞாயிறு | விடுமுறை | |
| 8 | திங்கள் | | |
| 9 | செவ்வாய் | மொகரம் விடுமுறை | |
| 10 | புதன் | | |
| 11 | வியாழன் | | |
| 12 | வெள்ளி | தேசிய நூலக தினம் | |
| 13 | சனி | விடுமுறை | |
| 14 | ஞாயிறு | விடுமுறை | |
| 15 | திங்கள் | சுதந்திர தினம் விடுமுறை | |
| 16 | செவ்வாய் | | |
| 17 | புதன் | | |
| 18 | வியாழன் | | |
| 19 | வெள்ளி | கிருஷ்ண ஜெயந்தி விடுமுறை | |
| 20 | சனி | விடுமுறை | |
| 21 | ஞாயிறு | விடுமுறை | |
| 22 | திங்கள் | | |
| 23 | செவ்வாய் | | |
| 24 | புதன் | | |
| 25 | வியாழன் | | |
| 26 | வெள்ளி | | |
| 27 | சனி | CRC day | |
| 28 | ஞாயிறு | விடுமுறை | |
| 29 | திங்கள் | | |
| 30 | செவ்வாய் | | |
| 31 | புதன் | விநாயகர் சதுர்த்தி விடுமுறை | |
| | | வேலை நாட்களின் எண்ணிக்கை | 19 |
| | | வேலை நாட்களின் மொத்த எண்ணிக்கை | 19+35=54 |

**செப்டம்பர் – 2022**

| தேதி | கிழமை | விவரம் | நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வியாழன் | | |
| 2 | வெள்ளி | | |
| 3 | சனி | விடுமுறை | |
| 4 | ஞாயிறு | விடுமுறை | |
| 5 | திங்கள் | ஆசிரியர் தினம் | |
| 6 | செவ்வாய் | | |
| 7 | புதன் | | |
| 8 | வியாழன் | உலக எழுத்தறிவு தினம் | |
| 9 | வெள்ளி | | |
| 10 | சனி | விடுமுறை | |
| 11 | ஞாயிறு | விடுமுறை | |
| 12 | திங்கள் | | |
| 13 | செவ்வாய் | | |
| 14 | புதன் | | |
| 15 | வியாழன் | | |
| 16 | வெள்ளி | உலக ஓசோன் தினம் | |
| 17 | சனி | விடுமுறை | |
| 18 | ஞாயிறு | விடுமுறை | |
| 19 | திங்கள் | | |
| 20 | செவ்வாய் | | |
| 21 | புதன் | சர்வதேச அமைதி தினம் | |
| 22 | வியாழன் | | |
| 23 | வெள்ளி | 11,12 ஆம் வகுப்புகளுக்கு காலாண்டு தேர்வு தொடக்கம் | |
| 24 | சனி | விடுமுறை | |
| 25 | ஞாயிறு | விடுமுறை | |
| 26 | திங்கள் | 1 முதல் 10ஆம் வகுப்புகளுக்கு காலாண்டுத் தேர்வு தொடக்கம் | |
| 27 | செவ்வாய் | | |
| 28 | புதன் | | |
| 29 | வியாழன் | | |
| 30 | வெள்ளி | காலாண்டுத் தேர்வுகள் முடிவு | |
| | | வேலை நாட்களின் எண்ணிக்கை | 22 |
| | | வேலை நாட்களின் மொத்த எண்ணிக்கை | 22+54=76 |

## அக்டோபர்– 2022

| தேதி | கிழமை | விவரம் | நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சனி | காலாண்டு விடுமுறை | |
| 2 | ஞாயிறு | காந்தி ஜெயந்தி விடுமுறை | |
| 3 | திங்கள் | காலாண்டு விடுமுறை | |
| 4 | செவ்வாய் | சரஸ்வதி பூஜை விடுமுறை | |
| 5 | புதன் | ஆயுத பூஜை விடுமுறை | |
| 6 | வியாழன் | பள்ளிகள் திறப்பு | |
| 7 | வெள்ளி | | |
| 8 | சனி | CRC day | |
| 9 | ஞாயிறு | மிலாடி நபி விடுமுறை | |
| 10 | திங்கள் | | |
| 11 | செவ்வாய் | | |
| 12 | புதன் | | |
| 13 | வியாழன் | | |
| 14 | வெள்ளி | | |
| 15 | சனி | விடுமுறை | |
| 16 | ஞாயிறு | விடுமுறை | |
| 17 | திங்கள் | | |
| 18 | செவ்வாய் | | |
| 19 | புதன் | | |
| 20 | வியாழன் | | |
| 21 | வெள்ளி | | |
| 22 | சனி | விடுமுறை | |
| 23 | ஞாயிறு | விடுமுறை | |
| 24 | திங்கள் | தீபாவளி விடுமுறை | |
| 25 | செவ்வாய் | | |
| 26 | புதன் | | |
| 27 | வியாழன் | | |
| 28 | வெள்ளி | | |
| 29 | சனி | விடுமுறை | |
| 30 | ஞாயிறு | விடுமுறை | |
| 31 | திங்கள் | | |
| | | வேலை நாட்களின் எண்ணிக்கை | 17 |
| | | வேலை நாட்களின் மொத்த எண்ணிக்கை | 17+76= 93 |

நவம்பர் – 2022

| தேதி | கிழமை | விவரம் | நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | செவ்வாய் | | |
| 2 | புதன் | | |
| 3 | வியாழன் | | |
| 4 | வெள்ளி | | |
| 5 | சனி | விடுமுறை | |
| 6 | ஞாயிறு | விடுமுறை | |
| 7 | திங்கள் | | |
| 8 | செவ்வாய் | | |
| 9 | புதன் | | |
| 10 | வியாழன் | | |
| 11 | வெள்ளி | தேசிய கல்வி தினம் | |
| 12 | சனி | CRC day | |
| 13 | ஞாயிறு | விடுமுறை | |
| 14 | திங்கள் | குழந்தைகள் தினம் | |
| 15 | செவ்வாய் | | |
| 16 | புதன் | | |
| 17 | வியாழன் | | |
| 18 | வெள்ளி | | |
| 19 | சனி | விடுமுறை | |
| 20 | ஞாயிறு | விடுமுறை | |
| 21 | திங்கள் | உலக மீன்வள தினம் | |
| 22 | செவ்வாய் | தேசிய மாணவர் படை தினம் | |
| 23 | புதன் | | |
| 24 | வியாழன் | | |
| 25 | வெள்ளி | | |
| 26 | சனி | விடுமுறை | |
| 27 | ஞாயிறு | விடுமுறை | |
| 28 | திங்கள் | | |
| 29 | செவ்வாய் | | |
| 30 | புதன் | | |
| | | வேலை நாட்களின் எண்ணிக்கை | 22 |
| | | வேலை நாட்களின் மொத்த எண்ணிக்கை | 22+93=115 |

டிசம்பர் – 2022

| தேதி | கிழமை | விவரம் | நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வியாழன் | உலக எய்ட்ஸ் (AIDS) விழிப்புணர்வு தினம் | |
| 2 | வெள்ளி | தேசிய மாசுக்கட்டுப்பாட்டு தினம் | |
| 3 | சனி | விடுமுறை | |
| 4 | ஞாயிறு | விடுமுறை | |
| 5 | திங்கள் | உலக மண் தினம் | |
| 6 | செவ்வாய் | | |
| 7 | புதன் | | |
| 8 | வியாழன் | | |
| 9 | வெள்ளி | | |
| 10 | சனி | விடுமுறை | |
| 11 | ஞாயிறு | மகாகவி பாரதியார் பிறந்த தினம் / உலக மலைகள் தினம் / விடுமுறை | |
| 12 | திங்கள் | | |
| 13 | செவ்வாய் | | |
| 14 | புதன் | | |
| 15 | வியாழன் | | |
| 16 | வெள்ளி | 11,12ஆம் வகுப்புகளுக்கு அரையாண்டுத் தேர்வுதொடக்கம் | |
| 17 | சனி | விடுமுறை | |
| 18 | ஞாயிறு | விடுமுறை | |
| 19 | திங்கள் | 1 முதல் 10ஆம் வகுப்புகளுக்கு அரையாண்டுத்தேர்வு தொடக்கம் | |
| 20 | செவ்வாய் | | |
| 21 | புதன் | | |
| 22 | வியாழன் | | |
| 23 | வெள்ளி | அரையாண்டுத் தேர்வு முடிவு | |
| 24 | சனி | விடுமுறை | |
| 25 | ஞாயிறு | கிறிஸ்துமஸ் விடுமுறை | |
| 26 | திங்கள் | அரையாண்டு விடுமுறை | |
| 27 | செவ்வாய் | அரையாண்டு விடுமுறை | |
| 28 | புதன் | அரையாண்டு விடுமுறை | |
| 29 | வியாழன் | அரையாண்டு விடுமுறை | |
| 30 | வெள்ளி | அரையாண்டு விடுமுறை | |
| 31 | சனி | விடுமுறை | |
| | | வேலை நாட்களின் எண்ணிக்கை | 17 |
| | | வேலை நாட்களின் மொத்த எண்ணிக்கை | 17+115 =132 |

ஜனவரி – 2023

| தேதி | கிழமை | விவரம் | நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ஞாயிறு | புத்தாண்டு விடுமுறை | |
| 2 | திங்கள் | பள்ளிகள் திறப்பு | |
| 3 | செவ்வாய் | | |
| 4 | புதன் | | |
| 5 | வியாழன் | | |
| 6 | வெள்ளி | | |
| 7 | சனி | CRC day | |
| 8 | ஞாயிறு | விடுமுறை | |
| 9 | திங்கள் | | |
| 10 | செவ்வாய் | | |
| 11 | புதன் | | |
| 12 | வியாழன் | தேசிய இளைஞர் தினம் | |
| 13 | வெள்ளி | | |
| 14 | சனி | விடுமுறை | |
| 15 | ஞாயிறு | பொங்கல் விடுமுறை | |
| 16 | திங்கள் | மாட்டுப் பொங்கல் / திருவள்ளுவர் நாள் விடுமுறை | |
| 17 | செவ்வாய் | உழவர் திருநாள் விடுமுறை | |
| 18 | புதன் | | |
| 19 | வியாழன் | | |
| 20 | வெள்ளி | | |
| 21 | சனி | விடுமுறை | |
| 22 | ஞாயிறு | விடுமுறை | |
| 23 | திங்கள் | | |
| 24 | செவ்வாய் | | |
| 25 | புதன் | தேசிய வாக்காளர் தினம் | |
| 26 | வியாழன் | குடியரசு தின விடுமுறை | |
| 27 | வெள்ளி | | |
| 28 | சனி | விடுமுறை | |
| 29 | ஞாயிறு | விடுமுறை | |
| 30 | திங்கள் | தீண்டாமை ஒழிப்பு தினம் / தியாகிகள் தினம் | |
| 31 | செவ்வாய் | | |
| | | வேலை நாட்களின் எண்ணிக்கை | 19 |
| | | வேலை நாட்களின் மொத்த எண்ணிக்கை | 19+132=151 |

பிப்ரவரி – 2023

| தேதி | கிழமை | விவரம் | நாட்களின்எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | புதன் | | |
| 2 | வியாழன் | உலக ஈர நில நாள் | |
| 3 | வெள்ளி | | |
| 4 | சனி | விடுமுறை | |
| 5 | ஞாயிறு | தைப்பூசம் விடுமுறை | |
| 6 | திங்கள் | | |
| 7 | செவ்வாய் | | |
| 8 | புதன் | | |
| 9 | வியாழன் | | |
| 10 | வெள்ளி | | |
| 11 | சனி | விடுமுறை | |
| 12 | ஞாயிறு | விடுமுறை | |
| 13 | திங்கள் | | |
| 14 | செவ்வாய் | | |
| 15 | புதன் | | |
| 16 | வியாழன் | | |
| 17 | வெள்ளி | | |
| 18 | சனி | CRC day | |
| 19 | ஞாயிறு | விடுமுறை | |
| 20 | திங்கள் | | |
| 21 | செவ்வாய் | உலக தாய் மொழி தினம் | |
| 22 | புதன் | | |
| 23 | வியாழன் | | |
| 24 | வெள்ளி | | |
| 25 | சனி | விடுமுறை | |
| 26 | ஞாயிறு | விடுமுறை | |
| 27 | திங்கள் | | |
| 28 | செவ்வாய் | தேசிய அறிவியல் தினம் | |
| | | வேலை நாட்களின் எண்ணிக்கை | 20 |
| | | வேலை நாட்களின் மொத்த எண்ணிக்கை | 20+151=171 |

மார்ச் – 2023

| தேதி | கிழமை | விவரம் | நாட்களின்எ ண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | புதன் | | |
| 2 | வியாழன் | | |
| 3 | வெள்ளி | | |
| 4 | சனி | விடுமுறை | |
| 5 | ஞாயிறு | விடுமுறை | |
| 6 | திங்கள் | | |
| 7 | செவ்வாய் | | |
| 8 | புதன் | | |
| 9 | வியாழன் | | |
| 10 | வெள்ளி | | |
| 11 | சனி | விடுமுறை | |
| 12 | ஞாயிறு | விடுமுறை | |
| 13 | திங்கள் | 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு தொடக்கம் | |
| 14 | செவ்வாய் | 11ஆம் வகுப்பு பொதுத் தேர்வு தொடக்கம் | |
| 15 | புதன் | | |
| 16 | வியாழன் | | |
| 17 | வெள்ளி | | |
| 18 | சனி | விடுமுறை | |
| 19 | ஞாயிறு | விடுமுறை | |
| 20 | திங்கள் | | |
| 21 | செவ்வாய் | உலக வன தினம் | |
| 22 | புதன் | உலக தண்ணீர் தினம் / தெலுங்கு புத்தாண்டு விடுமுறை | |
| 23 | வியாழன் | | |
| 24 | வெள்ளி | | |
| 25 | சனி | விடுமுறை | |
| 26 | ஞாயிறு | விடுமுறை | |
| 27 | திங்கள் | | |
| 28 | செவ்வாய் | | |
| 29 | புதன் | | |
| 30 | வியாழன் | | |
| 31 | வெள்ளி | | |
| | | வேலை நாட்களின் எண்ணிக்கை | 22 |
| | | வேலை நாட்களின் மொத்த எண்ணிக்கை | 22+171=193 |

ஏப்ரல் – 2023

| தேதி | கிழமை | விவரம் | நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சனி | விடுமுறை | |
| 2 | ஞாயிறு | விடுமுறை | |
| 3 | திங்கள் | 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு தொடக்கம் | |
| 4 | செவ்வாய் | மகாவீர் ஜெயந்தி விடுமுறை | |
| 5 | புதன் | | |
| 6 | வியாழன் | | |
| 7 | வெள்ளி | புனித வெள்ளி விடுமுறை | |
| 8 | சனி | விடுமுறை | |
| 9 | ஞாயிறு | விடுமுறை | |
| 10 | திங்கள் | | |
| 11 | செவ்வாய் | | |
| 12 | புதன் | | |
| 13 | வியாழன் | | |
| 14 | வெள்ளி | தமிழ் புத்தாண்டு / அம்பேத்கர் பிறந்தநாள் விடுமுறை | |
| 15 | சனி | விடுமுறை | |
| 16 | ஞாயிறு | விடுமுறை | |
| 17 | திங்கள் | | |
| 18 | செவ்வாய் | | |
| 19 | புதன் | | |
| 20 | வியாழன் | 1 முதல் 9ஆம் வகுப்பு வரை ஆண்டு இறுதித் தேர்வு தொடக்கம் | |
| 21 | வெள்ளி | | |
| 22 | சனி | ரம்ஜான் விடுமுறை | |
| 23 | ஞாயிறு | விடுமுறை | |
| 24 | திங்கள் | | |
| 25 | செவ்வாய் | | |
| 26 | புதன் | | |
| 27 | வியாழன் | | |
| 28 | வெள்ளி | கடைசி வேலை நாள் | |
| 29 | சனி | | |
| 30 | ஞாயிறு | | |
| | | வேலைநாட்களின் எண்ணிக்கை | 17 |
| | | வேலை நாட்களின் மொத்த எண்ணிக்கை | 17+193=210 |

***CRC day – மாணவர்களுக்கு மட்டும் விடுமுறை.**

**இணைப்பு-2**

## தொடக்கப் பள்ளி கால அட்டவணை

### (1 முதல் 3-ஆம் வகுப்பு வரை)

| நாள் / காலம் | 09.10 am - 09.30 am | 1<br>09.30am - 11.00am | 11.00am - 11.10am | 2<br>11.10am - 12.40am | 12.40pm - 01.30pm | 01.30pm - 02.00pm | 3<br>02.00pm - 03.30pm | 03.30pm - 03.40pm | 4<br>03.40pm - 04.10pm |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| திங்கள் | காலை வணக்கக் கூட்டம் | தமிழ் | இடை வேளை | கணக்கு | உணவு இடைவேளை | Spoken English | ஆங்கிலம் | இடை வேளை | சூழ்நிலையியல் / சமூக அறிவியல் செயல்பாடுகள் |
| செவ்வாய் | | ஆங்கிலம் | | தமிழ் | | கலையும் கைவண்ணமும் | கணக்கு | | விளையாட்டு |
| புதன் | | தமிழ் | | கணக்கு | | வாய்பாடு | ஆங்கிலம் | | சூழ்நிலையியல் / சமூக அறிவியல் செயல்பாடுகள் |
| வியாழன் | | ஆங்கிலம் | | தமிழ் | | சொல்வது எழுதுதல் | கணக்கு | | விளையாட்டு |
| வெள்ளி | | கணக்கு | | ஆங்கிலம் | | Spoken English | தமிழ் | | சூழ்நிலையியல் / சமூக அறிவியல் செயல்பாடுகள் |

**ஒரு வாரத்திற்கான பாட வேளைகள்**

| தமிழ் | ஆங்கிலம் | கணக்கு | சூழ்நிலையியல் / சமூக அறிவியல் செயல்பாடுகள் | விளையாட்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 5 | 5 | 5 | 3 | 2 | 20 |

·வெள்ளிக் கிழமை தோறும் 30 நிமிடங்கள் வளரறி செயல்பாடுகள் நடைபெறும்

| நேர ஒதுக்கீடு – தொடக்கப்பள்ளி (வாரத்திற்கு)<br>(1 முதல் 3–ஆம் வகுப்புகள் வரை) | |
|---|---|
| பாடம் | பாட நேரம் |
| தமிழ் | 7 1/2 மணி நேரம் |
| ஆங்கிலம் | 7 1/2 மணி நேரம் |
| கணிதம் | 7 1/2 மணி நேரம் |
| சூழ்நிலையியல் / சமூக அறிவியல் செயல்பாடுகள் | 1 1/2 மணி நேரம் |
| விளையாட்டு | 1 மணி நேரம் |
| இணைச் செயல்பாடுகள் (Spoken English, கலையும் கைவண்ணமும், வாய்பாடு, சொல்வது எழுதுதல் ) | 2 1/2 மணி நேரம் |

| மாதிரி கால அட்டவணை ( 1 முதல் 3 –ஆம் வகுப்புகள் வரை) | | | |
|---|---|---|---|
| வ. எண் | கால இடை வெளி | நிகழ்வுகள் | கால அளவு (நிமிடங்களில்) |
| 1 | 09.10am – 09.30am | காலை வணக்கக் கூட்டம் | 20 |
| 2 | 09.30am – 11.00am | முதல் பாடவேளை | 90 |
| 3 | 11.00am – 11.00am | இடைவேளை | 10 |
| 4 | 11.10am – 12.40am | இரண்டாம் பாடவேளை | 90 |
| 5 | 12.40pm – 01.30pm | மதிய உணவு இடைவேளை | 50 |
| 6 | 01.30pm – 02.00pm | இணைச் செயல்பாடுகள் (Spoken English, கலையும் கைவண்ணமும், வாய்பாடு, சொல்வது எழுதுதல் ) | 30 |
| 7 | 02.00pm – 03.30pm | மூன்றாம் பாடவேளை | 90 |
| 8 | 03.30pm – 03.40pm | இடைவேளை | 10 |
| 9 | 03.40pm – 04.10pm | நான்காம் பாடவேளை | 30 |

## இணைப்பு-3

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளி கால அட்டவணை (4 முதல் 5-ஆம் வகுப்பு வரை) | | | | | | | | | |
| வகுப்புகள் 4, 5 | | | | | | | | | |
| நாள் / காலம் | 09.10am - 09.30am | 1<br>09.30am - 11.00am | 11.00am - 11.10am | 2<br>11.10am - 12.40am | 12.40pm - 01.30pm | 01.30pm - 02.00pm | 3<br>02.00pm - 03.30pm | 03.30pm - 03.40pm | 4<br>03.40pm - 04.10pm |
| திங்கள் | காலை வணக்கக் கூட்டம் | தமிழ் | இடை வேளை | கணக்கு | உணவு இடைவேளை | சிறார் இதழ் வாசித்தல் | ஆங்கிலம் | இடை வேளை | கதை / பாட்டு |
| செவ்வாய் | | ஆங்கிலம் | | அறிவியல் | | | சமூக அறிவியல் | | விளையாட்டு |
| புதன் | | கணக்கு | | தமிழ் | | | ஆங்கிலம் | | தனி நடிப்பு / நாடகம் |
| வியாழன் | | தமிழ் | | கணக்கு | | | அறிவியல் | | நூலகம் (வாசித்தல்) |
| வெள்ளி | | சமூக அறிவியல் | | ஆங்கிலம் | | | தமிழ் | | விளையாட்டு |
| | | | | | | | | | |
| | | ஒரு வாரத்திற்கான பாட வேளைகள் | | | | | | | |
| | | தமிழ் | ஆங்கிலம் | கணக்கு | அறிவியல் | சமூக அறிவியல் | மொத்தம் | | |
| | | 4 | 4 | 3 | 2 | 20 | 15 | | |

| நேர ஒதுக்கீடு – தொடக்கப்பள்ளி (வாரத்திற்கு)<br>(4 முதல் 5–ஆம் வகுப்புகள் வரை) | |
|---|---|
| பாடம் | பாட நேரம் |
| தமிழ் | 6 மணி நேரம் |
| ஆங்கிலம் | 6 மணி நேரம் |
| கணிதம் | 4 1/2 மணி நேரம் |
| அறிவியல் | 3 மணி நேரம் |
| சமூக அறிவியல் | 3 மணி நேரம் |
| விளையாட்டு | 1 மணி நேரம் |
| சிறார் இதழ் வாசித்தல் | 4 மணி நேரம் |

மாதிரி கால அட்டவணை ( 4 முதல் 5 –ஆம் வகுப்புகள் வரை)

| வ. எண் | கால இடை வெளி | நிகழ்வுகள் | கால அளவு (நிமிடங்களில்) |
|---|---|---|---|
| 1 | 09.10am – 09.30am | காலை வணக்கக் கூட்டம் | 20 |
| 2 | 09.30am – 11.00am | முதல் பாடவேளை | 90 |
| 3 | 11.00am – 11.00am | இடைவேளை | 10 |
| 4 | 11.10am – 12.40am | இரண்டாம் பாடவேளை | 90 |
| 5 | 12.40pm – 01.30pm | மதிய உணவு இடைவேளை | 50 |
| 6 | 01.30pm – 02.00pm | சிறார் இதழ் வாசித்தல் | 30 |
| 7 | 02.00pm – 03.30pm | மூன்றாம் பாடவேளை | 90 |
| 8 | 03.30pm – 03.40pm | இடைவேளை | 10 |
| 9 | 03.40pm – 04.10pm | நான்காம் பாடவேளை | 30 |

**இணைப்பு -4**

## வகுப்பு - 6 முதல் 10 வரை

## மாதிரி கால அட்டவணை  வாரம் - 1

| நாள்/ காலம் | 09.10முப - 09.30முப | 1 09.30முப- 10.10முப | 2 10.10முப- 10.50முப | 10.50முப - 11.00முப | 3 11.00முப- 11.40முப | 4 11.40முப- 12.20பிப | 12.20பிப - 01.00பிப | 01.00பிப - 01.20பிப | 5 01.20பிப- 02.00பிப | 6 02.00பிப- 02.40பிப | 02.40பிப - 02.50பிப | 7 02.50பிப- 03.30பிப | 8 03.30பிப- 04.10பிப |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திங்கள் | காலை வணக்கக் கூட்டம் | கணிதம் | ஆங்கிலம் | இடைவேளை | அறிவியல் | நூலகம் | உணவு இடைவேளை | நூல் / சிறார் இதழ்கள் வாசித்தல் | சமூக அறிவியல் | கணிதம் | இடைவேளை | கல்விசாரா செயல்பாடுகள் 1: ஓவியம் / ஓரிகாமி / கைவினைச் செயல்பாடுகள் | |
| செவ்வாய் | | கணிதம் | ஆங்கிலம் | | உடற்கல்வி | சமூக அறிவியல் | | | தமிழ் | அறிவியல் | | கல்வி இணைச் செயல்பாடுகள் 1: இலக்கிய மன்றம் | |
| புதன் | | தமிழ் | ஆங்கிலம் | | அறிவியல் | கணிதம் | | | தமிழ் | சமூக அறிவியல் | | அறிவியல் | ஆங்கிலம் |
| வியாழன் | | கணிதம் | தமிழ் | | கணிதம் | சமூக அறிவியல் | | | அறிவியல் | சமூக அறிவியல் | | உடற்கல்வி | ஆங்கிலம் |
| வெள்ளி | | தமிழ் | ஆங்கிலம் | | அறிவியல் | சமூக அறிவியல் | | | தமிழ் | கணிதம் | | அறிவியல் | அனுபவப்பகிர்வு / நீதிபோதனை |

குறிப்பு: கொடுக்கப்பட்டுள்ள கால அட்டவணை திட்டமிடலுக்காக மட்டுமே. இதைப் பின்பற்றித் தலைமையாசிரியர்கள் அவரவர் பள்ளிச் சூழ்நிலைக்கேற்ப அட்டவணை தயாரித்துக்கொள்ளவேண்டும்.

## மாதிரி கால அட்டவணை வாரம் – 2

## வகுப்பு – 6 முதல் 10 வரை

| நாள்/ காலம் | 09.10முப – 09.30முப | 1 | 2 | 10.50முப – 11.00முப | 3 | 4 | 12.20பிப – 01.00பிப | 01.00பிப – 01.20பிப | 5 | 6 | 02.40பிப – 02.50பிப | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 09.30முப– 10.10முப | 10.10முப– 10.50முப | | 11.00முப– 11.40முப | 11.40முப– 12.20பிப | | | 01.20பிப– 02.00பிப | 02.00பிப– 02.40பிப | | 02.50பிப– 03.30பிப | 03.30பிப– 04.10பிப |
| திங்கள் | காலை வணக்கக் கூட்டம் | கணிதம் | ஆங்கிலம் | இடைவேளை | அறிவியல் | நூலகம் | உணவு இடைவேளை | நூல் / சிறார் இதழ்கள் வாசித்தல் | சமூக அறிவியல் | கணிதம் | இடைவேளை | கல்விசாரா செயல்பாடுகள் 2 : திரைப்படம் | |
| செவ்வாய் | | கணிதம் | ஆங்கிலம் | | உடற்கல்வி | சமூக அறிவியல் | | | தமிழ் | அறிவியல் | | கல்வி இணைச் செயல்பாடுகள் 2: வினாடி வினா மன்றம் | |
| புதன் | | தமிழ் | ஆங்கிலம் | | அறிவியல் | கணிதம் | | | தமிழ் | சமூக அறிவியல் | | அறிவியல் | ஆங்கிலம் |
| வியாழன் | | கணிதம் | தமிழ் | | கணிதம் | சமூக அறிவியல் | | | அறிவியல் | சமூக அறிவியல் | | உடற்கல்வி | ஆங்கிலம் |
| வெள்ளி | | தமிழ் | ஆங்கிலம் | | அறிவியல் | சமூக அறிவியல் | | | தமிழ் | கணிதம் | | அறிவியல் | அனுபவப்பகிர்வு / நீதிபோதனை |

குறிப்பு: கொடுக்கப்பட்டுள்ள கால அட்டவணை திட்டமிடலுக்காக மட்டுமே. இதைப் பின்பற்றித் தலைமையாசிரியர்கள் அவரவர் பள்ளிச் சூழ்நிலைக்கேற்ப அட்டவணை தயாரித்துக்கொள்ளவேண்டும்.

## மாதிரி கால அட்டவணை வாரம் – 3

## வகுப்பு – 6 முதல் 10 வரை

| நாள்/ காலம் | 09.10முப – 09.30முப | 1<br>09.30முப– 10.10முப | 2<br>10.10முப– 10.50முப | 10.50முப – 11.00முப | 3<br>11.00முப– 11.40முப | 4<br>11.40முப– 12.20பிப | 12.20பிப – 01.00பிப | 01.00பிப – 01.20பிப | 5<br>01.20பிப– 02.00பிப | 6<br>02.00பிப– 02.40பிப | 02.40பிப – 02.50பிப | 7<br>02.50பிப– 03.30பிப | 8<br>03.30பிப– 04.10பிப |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திங்கள் | காலை வணக்கக் கூட்டம் | கணிதம் | ஆங்கிலம் | இடைவேளை | அறிவியல் | நூலகம் | உணவு இடைவேளை | நூல் / சிறார் இதழ்கள் வாசித்தல் | சமூக அறிவியல் | கணிதம் | இடைவேளை | கல்விசாரா செயல்பாடுகள் 3 : நாடகம் / கூத்து | |
| செவ்வாய் | | கணிதம் | ஆங்கிலம் | | உடற்கல்வி | சமூக அறிவியல் | | | தமிழ் | அறிவியல் | | கல்வி இணைச் செயல்பாடுகள் 3: சுற்றுச்சூழல் மன்றம் | |
| புதன் | | தமிழ் | ஆங்கிலம் | | அறிவியல் | கணிதம் | | | தமிழ் | சமூக அறிவியல் | | அறிவியல் | ஆங்கிலம் |
| வியாழன் | | கணிதம் | தமிழ் | | கணிதம் | சமூக அறிவியல் | | | அறிவியல் | சமூக அறிவியல் | | உடற்கல்வி | ஆங்கிலம் |
| வெள்ளி | | தமிழ் | ஆங்கிலம் | | அறிவியல் | சமூக அறிவியல் | | | தமிழ் | கணிதம் | | அறிவியல் | அனுபவப்பகிர்வு / நீதிபோதனை |

குறிப்பு: கொடுக்கப்பட்டுள்ள கால அட்டவணை திட்டமிடலுக்காக மட்டுமே. இதைப் பின்பற்றித் தலைமையாசிரியர்கள் அவரவர் பள்ளிச் சூழ்நிலைக்கேற்ப அட்டவணை தயாரித்துக்கொள்ளவேண்டும்.

## மாதிரி கால அட்டவணை வாரம் – 4

## வகுப்பு – 6 முதல் 10 வரை

| நாள் / காலம் | 09.10முப – 09.30முப | 1 | 2 | 10.50முப – 11.00முப | 3 | 4 | 12.20பிப – 01.00பிப | 01.00பிப – 01.20பிப | 5 | 6 | 02.40பிப – 02.50பிப | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 09.30முப– 10.10முப | 10.10முப– 10.50முப | | 11.00முப– 11.40முப | 11.40முப– 12.20பிப | | | 01.20பிப– 02.00பிப | 02.00பிப– 02.40பிப | | 02.50பிப– 03.30பிப | 03.30பிப– 04.10பிப |
| திங்கள் | காலை வணக்கக் கூட்டம் | கணிதம் | ஆங்கிலம் | இடைவேளை | அறிவியல் | நூலகம் | உணவு இடைவேளை | நூல் / சிறார் இதழ்கள் வாசித்தல் | சமூக அறிவியல் | கணிதம் | இடைவேளை | கல்விசாரா செயல்பாடுகள் 4 : இசை / வாய்ப்பாட்டு / நடனம் / பாரம்பரியக் கலைகள் | |
| செவ்வாய் | | கணிதம் | ஆங்கிலம் | | உடற்கல்வி | சமூக அறிவியல் | | | தமிழ் | அறிவியல் | | *கல்வி இணைச் செயல்பாடுகள் 4 | |
| புதன் | | தமிழ் | ஆங்கிலம் | | அறிவியல் | கணிதம் | | | தமிழ் | சமூக அறிவியல் | | அறிவியல் | ஆங்கிலம் |
| வியாழன் | | கணிதம் | தமிழ் | | கணிதம் | சமூக அறிவியல் | | | அறிவியல் | சமூக அறிவியல் | | உடற்கல்வி | ஆங்கிலம் |
| வெள்ளி | | தமிழ் | ஆங்கிலம் | | அறிவியல் | சமூக அறிவியல் | | | தமிழ் | கணிதம் | | அறிவியல் | அனுபவப்பகிர்வு / நீதிபோதனை |

குறிப்பு:

1. கொடுக்கப்பட்டுள்ள கால அட்டவணை திட்டமிடலுக்காக மட்டுமே. இதைப் பின்பற்றித் தலைமையாசிரியர்கள் அவரவர் பள்ளிச் சூழ்நிலைக்கேற்ப அட்டவணையைத் தயாரித்துக்கொள்ளவேண்டும்.
2. கல்வி இணைச் செயல்பாடுகள் 4: தலைமையாசிரியர்கள் கொடுக்கப்பட்டுள்ள மன்றப்பட்டியலிருந்து தங்கள் பள்ளிக்கு ஏற்ற மன்றத்தைத் தெரிவு செய்து செயல்பாடுகளை நடத்திக்கொள்ளலாம்.

இணைப்பு-5

| மாதிரி கால அட்டவணை | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வகுப்பு - XI அறிவியல் பிரிவு | | | | | | | | | | | | |
| நாள் / காலம் | 09.00 மு.ப - 09.30 மு.ப | 1<br>09.30மு.ப - 10.10மு.ப | 2<br>10.10மு.ப - 10.50மு.ப | 10.50 மு.ப - 11.00 மு.ப | 3<br>11.00மு.ப - 11.40மு.ப | 4<br>11.40மு.ப - 12.20பி.ப | 12.20 பி.ப - 01.00 பி.ப | 5<br>01.00பி.ப - 02.00பி.ப | 6<br>02.00பி.ப - 02.40பி.ப | 02.40 பி.ப - 02.50 பி.ப | 7<br>02.50 பி.ப - 03.30 பி.ப | 8<br>03.30 பி.ப - 04.10 பி.ப |
| திங்கள் | காலை வணக்கக் கூட்டம் | பாடம்-1 | ஆங்கிலம் | இடை வேளை | பாடம்-4 | பாடம்-3 | உணவு இடைவேளை | பாடம்-2 | மொழிப் பாடம் | இடை வேளை | நூலகம் | உடற் கல்வி |
| செவ்வாய் | | பாடம்-1 | பாடம்-2 | | மொழிப் பாடம் | பாடம்-3 | | பாடம்-4 | பாடம்-2 | | நீதி போதனை | உடற் கல்வி |
| புதன் | | பாடம்-1 | பாடம்-2 | | பாடம்-3 | பாடம்-4 | | பாடம்-3 | ஆங்கிலம் | | பாடம்-1 செய்முறை | பாடம்-1 செய்முறை |
| வியாழன் | | பாடம்-1 | பாடம்-4 | | பாடம்-2 | ஆங்கிலம் | | மொழிப் பாடம் | பாடம்-4 | | பாடம்-3 செய்முறை | பாடம்-3 செய்முறை |
| வெள்ளி | | பாடம்-4 | பாடம்-3 | | பாடம்-4 | மொழிப் பாடம் | | பாடம்-1 | ஆங்கிலம் | | பாடம்-2 செய்முறை | பாடம்-2 செய்முறை |

குறிப்பு- கொடுக்கப்பட்டுள்ள கால அட்டவணை மாதிரிக்காக மட்டுமே. இதைப் பின்பற்றி தலைமையாசிரியர்கள் அவரவர் பள்ளிச் சூழ்நிலைக்கேற்ப அட்டவணை தயாரித்துக் கொள்ள வேண்டும்.

| மாதிரி கால அட்டவணை | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வகுப்பு - XI கலைப்பிரிவு | | | | | | | | | | | | |
| நாள் / காலம் | 09.00 மு.ப - 09.30 மு.ப | 1<br>09.30மு.ப - 10.10மு.ப | 2<br>10.10மு.ப - 10.50மு.ப | 10.50 மு.ப - 11.00 மு.ப | 3<br>11.00மு.ப - 11.40மு.ப | 4<br>11.40மு.ப - 12.20பி.ப | 12.20 பி.ப - 01.00 பி.ப | 5<br>01.00பி.ப - 02.00பி.ப | 6<br>02.00பி.ப - 02.40பி.ப | 02.40 பி.ப - 02.50 பி.ப | 7<br>02.50 பி.ப - 03.30 பி.ப | 8<br>03.30 பி.ப - 04.10 பி.ப |
| திங்கள் | காலை வணக்கக் கூட்டம் | ஆங்கிலம் | பாடம்-2 | இடை வேளை | பாடம்-4 | பாடம்-3 | உணவு இடைவேளை | பாடம்-1 | பாடம்-1 | இடை வேளை | நூலகம் | நீதி போதனை |
| செவ்வாய் | | பாடம்-1 | பாடம்-4 | | ஆங்கிலம் | பாடம்-3 | | பாடம்-2 | மொழிப் பாடம் | | பாடம்-4 செய்முறை | பாடம்-4 செய்முறை |
| புதன் | | பாடம்-1 | மொழிப் பாடம் | | பாடம்-2 | பாடம்-4 | | பாடம்-3 | பாடம்-3 | | ஆங்கிலம் | உடற் கல்வி |
| வியாழன் | | பாடம்-1-5 | பாடம்-3 | | பாடம்-2 | மொழிப் பாடம் | | பாடம்-4 | பாடம்-2 | | உடற் கல்வி | பாடம்-3 |
| வெள்ளி | | பாடம்-2-6 | பாடம்-3 | | பாடம்-4 | ஆங்கிலம் | | மொழிப் பாடம் | பாடம்-2 | | பாடம்-1 | பாடம்-1 |

குறிப்பு- கொடுக்கப்பட்டுள்ள கால அட்டவணை மாதிரிக்காக மட்டுமே. இதைப் பின்பற்றி தலைமையாசிரியர்கள் அவரவர் பள்ளிச் சூழ்நிலைக்கேற்ப அட்டவணை தயாரித்துக் கொள்ள வேண்டும்.

## மாதிரி கால அட்டவணை

### வகுப்பு - XII அறிவியல் பிரிவு

| நாள் / காலம் | | 1 | 2 | | 3 | 4 | | 5 | 6 | | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 09.00 மு.ப - 09.30 மு.ப | 09.30மு.ப - 10.10மு.ப | 10.10மு.ப - 10.50மு.ப | 10.50 மு.ப - 11.00 மு.ப | 11.00மு.ப - 11.40மு.ப | 11.40மு.ப - 12.20பி.ப | 12.20 பி.ப - 01.00 பி.ப | 01.00பி.ப - 02.00பி.ப | 02.00பி.ப - 02.40பி.ப | 02.40 பி.ப - 02.50 பி.ப | 02.50 பி.ப - 03.30 பி.ப | 03.30 பி.ப - 04.10 பி.ப |
| திங்கள் | காலை வணக்கக் கூட்டம் | பாடம்-4 | பாடம்-3 | இடை வேளை | பாடம்-2 | மொழிப் பாடம் | உணவு இடைவேளை | பாடம்-1 | ஆங்கிலம் | இடை வேளை | உடற் கல்வி | நீதி போதனை |
| செவ்வாய் | | பாடம்-4 | பாடம்-3 | | பாடம்-2 | ஆங்கிலம் | | மொழிப் பாடம் | பாடம்-4 | | பாடம்-1 செய்முறை | பாடம்-1 செய்முறை |
| புதன் | | பாடம்-4 | பாடம்-3 | | பாடம்-1 | பாடம்-1 | | பாடம்-3 | மொழிப் பாடம் | | பாடம்-2 செய்முறை | பாடம்-2 செய்முறை |
| வியாழன் | | பாடம்-4 | பாடம்-1 | | மொழிப் பாடம் | ஆங்கிலம் | | பாடம் -2 | பாடம்-3 | | நூலகம் | உடற்கல்வி |
| வெள்ளி | | பாடம்-4 | பாடம்-1 | | ஆங்கிலம் | பாடம்-2 | | பாடம்-4 | பாடம்-2 | | பாடம்-3 செய்முறை | பாடம்-3 செய்முறை |

குறிப்பு- கொடுக்கப்பட்டுள்ள கால அட்டவணை மாதிரிக்காக மட்டுமே. இதைப் பின்பற்றி தலைமையாசிரியர்கள் அவரவர் பள்ளிச் சூழ்நிலைக்கேற்ப அட்டவணை தயாரித்துக் கொள்ள வேண்டும்.

## மாதிரி கால அட்டவணை

### வகுப்பு - XII கலைப்பிரிவு

| நாள் / காலம் | 09.00 மு.ப - 09.30 மு.ப | 1 | 2 | 10.50 மு.ப - 11.00 மு.ப | 3 | 4 | 12.20 பி.ப - 01.00 பி.ப | 5 | 6 | 02.40 பி.ப - 02.50 பி.ப | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 09.30மு.ப - 10.10மு.ப | 10.10மு.ப - 10.50மு.ப | | 11.00மு.ப - 11.40மு.ப | 11.40மு.ப - 12.20பி.ப | | 01.00பி.ப - 02.00 பி.ப | 02.00பி.ப - 02.40பி.ப | | 02.50 பி.ப - 03.30 பி.ப | 03.30 பி.ப - 04.10 பி.ப |
| திங்கள் | காலை வணக்கக் கூட்டம் | பாடம்-2 | மொழிப் பாடம் | இடை வேளை | பாடம்-3 | பாடம்-1 | உணவு இடைவேளை | பாடம்-2 | பாடம்-2 | இடை வேளை | உடற் கல்வி | நீதி போதனை |
| செவ்வாய் | | பாடம்-3 | பாடம்-1 | | பாடம்-4 | மொழிப் பாடம் | | பாடம்-3 | ஆங்கிலம் | | பாடம்-4 செய்முறை | பாடம்-4 செய்முறை |
| புதன் | | பாடம்-2 | பாடம்-4 | | ஆங்கிலம் | பாடம்-3 | | மொழிப் பாடம் | பாடம்-4 | | பாடம்-1 | பாடம்-1 |
| வியாழன் | | பாடம்-2 | பாடம்-1 | | பாடம்-3 | பாடம்-1 | | பாடம்-4 | பாடம்-3 | | நூலகம் | ஆங்கிலம் |
| வெள்ளி | | பாடம்-2 | ஆங்கிலம் | | பாடம்-3 | பாடம்-4 | | பாடம்-1 | மொழிப் பாடம் | | உடற் கல்வி | பாடம்-2 |

குறிப்பு- கொடுக்கப்பட்டுள்ள கால அட்டவணை மாதிரிக்காக மட்டுமே. இதைப் பின்பற்றி தலைமையாசிரியர்கள் அவரவர் பள்ளிச் சூழ்நிலைக்கேற்ப அட்டவணை தயாரித்துக் கொள்ள வேண்டும்.